# சுபீட்சம்

SUPEEDSAM
EVERYTHING FOR PEOPLE

நிகழ்நிலை பத்திரிகை; அனைத்து விடயங்களும் மக்களுக்காகவே

செவ்வாய்க்கிழமை 23.03.2021 | supeedsam.com | supeedsam@gmail.com








# கிழக்கில் ஏறத்தாழ மூன்றில் ஒரு பகுதி நிலம் எம்மிடம் இருந்து பறிக்கப்பட்டுவிட்டது

1970 களில் ஆயுத போராட்டம் ஆரம்பிப்பதற்கு முன்னதாகவே தமிழ் மக்கள் பாரம்பரியமக வாழ்ந்துவரும் கிழக்கு மாகாணத்தின் ஏறத்தாழ மூன்றில் ஒரு பகுதி நிலம் எம்மிடம் இருந்து பறிக்கப்பட்டு விட்டது. எமக்கு எதிரான இந்த நில ஆக்கிரமிப்பு என்பது சத்தம் இன்றி எமக்கு எதிராக மேற்கொள்ளப் பட்டுவரும் ஒரு பெரும்



02 ஆம் பக்கத்தில்...

## கல்லறைகளில் ஏறி மிதித்து நாங்கள் பிழைப்புவாத அரசியலை நடாத்த முடியாது

### இராஜாங்க அமைச்சர் ச.வியாழேந்திரன்

(படுவான் பாலகன்)

தமிழ்மக்களின் பிரச்சினைகளையும், அம்மக்களின் கண்ணீரையும், வைத்துக்கொண்டு அவர்களின் கல்லறைகளில் ஏறி மிதித்து நாங்கள் பிழைப்புவாத அரசியலை நடாத்த முடியாதென இராஜாங்க அமைச்சர் ச.வியாழேந்திரன் தெரிவித்தார்.

அதிமேதகு ஜனாதிபதியின் ''நாட்டைக்கட்டியெழுப்பும் சுபீட்சத்தின் நோக்கு'' கொள்கைப் பிரகடனத்திற்கு அமைவாக ''விரைவான கட்டுமான செலவு செயற்திறன் கொண்ட கொங்கிறீட் பேனல் நிரந்தர வீடமைப்புத்



02 ஆம் பக்கத்தில்...

## அசாத்சாலி கைது; அமெரிக்க வெளியுறவுத்துறை நேரடி கவனம்

இந்த விடயத்தில் அமெரிக்க வெளியுறவுத்துறை செயலர் அந்தோனி பிளிங்க்ஸ் நேரடியாக தொடர்பு கொண்டுள்ளதுடன் கைது செய்யப்பட்டமை தொடர்பாக விசாரிக்க ஒரு அமெரிக்க வெளியுறவு செயலாளரும் நியமிக்கப்பட்டுள்ளார்.

கடந்த வருடம் ஏப்ரல் 14ம் திகதி கைது செய்யப்பட்ட சட்டத்தரணி ஹிஜாஸ் ஹிஸ்புல்லா தொடர்பாகவும் அமெரிக்க வெளியுறவுத்துறையும் கவனம் செலுத்தியுள்ளது.

மனித உரிமைகள் பேரவை முன்னிலையில் நடைபெறவுள்ள வாக்கெடுப்பில் அசாத் சாலி

02 ஆம் பக்கத்தில்...

## பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரையான பேரணி சமர்ப்பணம் வழுங்க 4 வார அவகாசம் வழுங்கிய நீதிமன்று

(எஸ். தில்லைநாதன்)

பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரையான பேரணி தொடர்பாக பொலீசாரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு தொடர்பாக பிரதிவாதிகள் சார்பில் மேலதிக நடவடிக்கை எடுக்க கூடாது என தாக்கல்

02 ஆம் பக்கத்தில்...

### திருமலையில் 08 ஆவது நாளாகவும் தொடர்கிறது

## சாகும்வரை உண்ணாவிரதம்



(ஹஸ்பர் ஏ ஹலீம்)

வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரது உறவுகளின் கோரிக்கைகளையும், அரசியல் கைதிகளின் விடுதலையும், தமிழ் மக்களின் சம உரிமைகளையும் சர்வதேசம்

02 ஆம் பக்கத்தில்...

### பாதுகாப்பற்ற ரயில்வே கடவை;

## தலைமன்னாரில் கவனயீர்ப்பு போராட்டம்



( வாஸ் கூஞ்ஞ )

கடந்த 16.03.2021 அன்று தலைமன்னாரி பியரில் இடம்பெற்ற ரயில் மற்றும் பிரயாணிகளை ஏற்றிச் சென்ற தனியார் பேரூந்து ஆகியன பாதுகாப்பற்ற ரயில்வே கடவையில் மோதுண்டதில் ஒரு மாணவன் இறந்ததுடன் 15 மாணவர்கள் உட்பட 24 பேர் படுகாயங்களுக்கு உள்ளாகி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றுவரும் இவ்வேளையில்

நேற்று (22.03.2021) திங்கள்கிழமை தலைமன்னார்

02 ஆம் பக்கத்தில்...

## ஓட்டமாவடி பிரதேச சபை உப தவிசாளர் இராஜினாமா



(எச்.எம்.எம்.பர்ஸான்)

கோறளைப்பற்று மேற்கு ஓட்டமாவடி பிரதேச சபை தவிசாளர் யூ.எல்.அஹ்மட் லெப்பை தனது உப தவிசாளர் பதவியை திங்கட்கிழமை (22) இராஜினாமா செய்துள்ளார்.

கடந்த 2018 ஆம் ஆண்டு இடம்பெற்ற பிரதேச சபைத் தேர்தலில் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி ஊடாக

## மலையக மக்கள் முன்னணி ஒருபோதும் அரசுடன் இணையாது கூட்டணியாக பயணிப்போம்

### இராதாகிருஷ்ணன் எம்.பி தெரிவிப்பு



(க.கிஷாந்தன்)

''மலையக மக்கள் முன்னணி ஒருபோதும் அரசாங்கத்துடன் இணையாது. அரவிந்தகுமார் எம்.பியை நீக்கியதன் மூலம் தமிழ் முற்போக்கு கூட்டணியில் ஏற்பட்டிருந்த சிறு விரிசலும் முடிவுக்கு வந்துள்ளது. எனவே, கூட்டணியாக பயணிப்போம்.'' என்று மலையக மக்கள் முன்னணியின்

02 ஆம் பக்கத்தில்...






## மாகாண சபை தேர்தல் தொடர்பாக விரைவான தீர்மானத்தை எடுப்பது, ஜனாதிபதி மற்றும் பிரதமரின் பொறுப்பு

கபே அமைப்பு

CaFFE

(பைஷல் இஸ்மாயில்)

மாகாண சபைத் தேர்தல் கடந்த மூன்று வருடங்களாக வெறும் பேசுப்பொருளாகவே உள்ளதாகவும், அவ்விடயத்தில் ஜனாதிபதி மற்றும் பிரதமர் விரைவான தீர்மானத்தை எடுக்க வேண்டுமென சுதந்திரமானதும்

02 ஆம் பக்கத்தில்...






## திருகோணமலை மாவட்ட கொவிட் செயலணி கூட்டம்



(பொன்ஆனந்தம் )

திருகோணமலை மாவட்ட கொவிட் செயலணி கூட்டம் நேற்று மாவட்ட செயலகத்தில் மாவட்ட அரசாங்க அதிபர் சமன் தர்சன பாண்டிகோராள தலைமையில் நடைபெற்றது.

கடந்த சில தினங்களாக திருகோணமலை மாவட்டத்தில் சில பிரதேசங்களில் ஒரேசமயத்தில் அதிகளவில் கொவிட் தொற்றாளர்கள். எனவே இந்த சந்தர்ப்பத்தில்

02 ஆம் பக்கத்தில்...




## பாதுகாப்பற்ற ரயில்வே கடவை; தலைமன்னாரில்...

பியரில் சம்பவம் நடைபெற்ற இடத்திலிருந்து தலைமன்னார் பொலிஸ் நிலையம் வரை தலைமன்னார் பகுதியிலுள்ள தலைமன்னார் பியர். தலைமன்னார் கிராமம், தலைமன்னார் ஸ்ரேசன் ஆகிய தலைமன்னார் பகுதி பொதுமக்கள், பல அமைப்புக்களையும் சார்ந்தவர்ள் மற்றும் மாணவர்கள் பல நூற்றுக் கணக்கானோர் பாதுகாப்பற்ற ரயில்வே மற்றும் ஐந்து சந்திக்கு நேரே இவ் கடவையை ரயில்வே திணைக்களம் அமைத்ததைக் கண்டித்து கவனயீர்ப்பு போராட்டத்தை காலை ஏழு மணி தொடக்கம் நண்பகல் வரை மேற்கொண்டிருந்தனர்.

இவ் கவனயீர்ப்பு போராட்டத்தின்போது பெற்றோர் மாணவர்கள் தங்கள் கரங்களில் ஏந்திக் கொண்டிருந்த பதாதைகளில் 'இளங்குருத்துக்களை வாழ்ந்து களிப்புறுவதற்கே கருகுவதற்கல்ல', 'நாட்டில் நல்ல தலைவர்களை நலமுடன் வாழவிடு'. 'பிஞ்சு உயிரின் மதிப்பினை வான் தாங்குமோ', 'பாதுகாப்பு எப்போதும் விபத்தில்லை ஒருபோதும்', 'உடலால் மாண்டான் எங்கள் தருன். ஊள்ளத்தால் மாள்கின்றோம் நாம்', 'காயப்பட்டு களைத்திருக்கும் எம் மாணவர்களின் மனக்காயங்களை ஆற்றுவது யார்'போன்ற வாசகங்களும் காணப்பட்டன.

அத்துடன் இன்றைய நாளில் இப் பகுதியிலுள்ள பலரும் தங்கள் தொழிலை கைவிட்டு இவ் கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டிருந்ததையும் காணக்கூடியதாக இருந்தது. இதன்போது தலைமன்னார் பகுதியிலுள்ள அனைத்து அமைப்புக்களும் ஜனாதிபதி மற்றும் சம்பந்தப்பட்ட அமைச்சு திணைக்கள அதிகாரிகளுக்கும் மகஜர்களை மன்னார் அரசாங்க அதிபருக்கு ஊடாக கிடைக்கப்பெற கையளித்தனர்.

## திருகோணமலை மாவட்ட கொவிட் செயலணி...

மக்கள் கொவிட்டிலிருந்து பாதுகாப்புப் பெறுவதற்காக முகக் கவசம் அணிதல், கைகளை அடிக்கடி கழுவுதல், சமூக இடைவெளி பேணுதல் உட்பட சுகாதார நடைமுறைகளை இறுக்கமாக கடைப்பிடிக்குமாறு இதன்போது மாவட்ட அரசாங்க அதிபர் கேட்டுக்கொண்டார். மாவட்டத்தினுடைய பல பிரதேசங்களில் மக்கள் சுகாதார நடைமுறைகளான முகக்கவசம் அணிதல் போன்ற விடயங்களை தவிர்த்து வருவதாகவும் எனவே இந்த சந்தர்ப்பத்தில் முகக்கவசத்தை கட்டாயமாக அணிவதன் மூலம் குறித்த வைரஸிலிருந்து பாதுகாப்புப் பெறுவதற்கு காரணமாக அமையும் என்றும் மாவட்டத்தினுடைய இயல்புநிலை கெடாமல் உரிய செயற்பாடுகளை தங்குதடையின்றி மேற்கொள்வதற்கு ஏதுவாக அமையும் என்றும் அரசாங்க அதிபர் மேலும் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் பொலிஸ் ,இராணுவ உயர் அதிகாரிகள் மற்றும் அரச திணைக்கள தலைவர்கள் உட்பட பலரும் கலந்து கொண்டார்கள்.

## திருமலையில் 08 ஆவது நாளாகவும் தொடர்கிறது...

கவனத்தில் கொள்ளவேண்டும் என வலியுறுத்தி கையளிக்கப்பட்டு கடத்தப்பட்டு வலிந்து காணாமலாக்கப்பட்டோர் சங்கத்தின் திருகோணமலை மாவட்ட தலைவி திருமதி நா. ஆஷா மற்றும் திருமதி இரா. கோசலாதேவி ஆகியோர் திருகோணமலை சிவன் கோயிலின் முன்றலில் முன்னெடுத்துள்ள சாகும் வரையிலான உண்ணாவிரதப் போராட்டம் நேற்று திங்கட்கிழமை (22) 08 ஆவது நாளாகவும் தொடர்ந்தது.

இந்த நிலையில் இருவரும் உடல் சோர்வுடன், களைப்புடன் கருத்துத் தெரிவிக்கையில்; இன்று வரை நாங்கள் எங்கள் உறவுகளுக்கு என்ன நடந்தது என அவர்களுக்கான நீதி கோரிகையில் புகைப்படங்களுடனும், கண்ணீருடனும் வீதிகளில் பல அச்சுறுத்தல்களுக்கு மத்தியில் போராடிக்கொண்டிருக்கின்றோம். இலங்கை அரசாங்கத்தினுடாக எவ்வித தீர்வும் கிடைக்கப் பெறாமையினாலேயே எமது போராட்டங்களை நாங்கள் சர்வதேசத்தை நோக்கி நகர்த்தியிருக்கின்றோம்.

தமிழ் அரசியல் கைதிகள் உடன் விடுதலை செய்யப்படவேண்டும், எமது உரிமைகள் மறுக்கப்படுகின்றன, இங்கு நீதி கிடைக்காமையினாலேயே நாங்கள் சர்வதேசத்தை நாடி வந்திருக்கின்றோம் எமக்கான நீதி கிடைக்கும் வரை எமது போராட்டம் தொடரும் என இருவரும் தெரிவித்தனர்.

## அசாத்சாலி கைது; அமெரிக்க வெளியுறவுத்...

கைது செய்யப்பட்டமை தொடர்பாக மோசமாக தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய வாய்ப்பு உள்ளது. ஆணைக்குழுவில் உறுப்புரிமை வகிக்கும் 11 முஸ்லிம் நாடுகள் உள்ளதுடன் அந்த நாடுகள் அனைத்தினதும் ஆதரவு அதற்கு கிடைக்கும் என அரசாங்கம் நம்புகிறது. இருப்பினும், ஏற்பட்டுள்ள நிலைமையை எதிர்கொண்டு, சில நாடுகள் இலங்கைக்கு எதிராக வாக்களிக்கலாம் (பிரேரணைக்கு ஆதரவாக) அல்லது விலகலாம். அப்படியானால், அது இலங்கைக்கு கடுமையான தோல்வியாக இருக்கும் என ஜெனிவாத்த கவல்கள் தெரிவிக்கின்றன.







## மாகாண சபை தேர்தல் தொடர்பாக விரைவான தீர்மானத்தை எடுப்பது...

நீதியானதுமான தேர்தலுக்கான மக்கள் இயக்கம் வலியுறுத்தி உள்ளது என்று அவ்வமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் மனாஸ் மக்கீன் தெரிவித்தார்.

மாகாண சபை தேர்தல் விவகாரம் தொடர்பாக அவ்வமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் மனாஸ் மக்கீன் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இவ்விடயம் தொடர்பாக மனாஸ் மக்கீன் மேலும் கூறியுள்ளதாவது, இலங்கையிலுள்ள 9 மாகாண சபைகளினதும் உத்தியோகப்பூர்வ கால எல்லை நிறைவுக்கு வந்து பல வருடங்களை கடந்துள்ளது. அதாவது மேல் மாகாணம், மத்திய மாகாணம், தென் மாகாணம் , வடக்கு மாகாணம், கிழக்கு மாகாணம், வடமேல் மாகாணம், வடமத்திய மாகாணம், ஊவா மாகாணம், சப்ரகமுவ மாகாணம் ஆகியற்றின் கால எல்லைகள் நிறைவுக்கு வந்துள்ளன. இந்நிலையில் குறித்த தேர்தலினை நடத்துவது தொடர்பாக ஒழுங்கான கருத்துக்களை அரசாங்கம் முன்வைக்காமல் இருப்பது கவலைக்குரிய விடயமாகும்.

அரசாங்கத்தில் அங்கத்துவம் வகிக்ககூடிய நாடாளுமன்ற உறுப்பினர்களே மாகாண சபைத்தேர்தல் தொடர்பாக முரண்பாடான கருத்துக்களை வெளிப்படுத்தி வருகின்றனர்.

மகாகாணசபை முறைமை இலங்கை தேர்தல் முறையில் இருக்கின்றபோது, இந்த தேர்தலை பலவருடகாலமாக நடத்தாமல் இருப்பது ஜனநாயகத்தை கேள்விக்கு உள்ளாக்கும் விடயமாகும்.

எனவே இந்த மாகாண சபை தேர்தல் தொடர்பாக விரைவான தீர்மானத்தை எடுப்பது, ஜனாதிபதி மற்றும் பிரதமர், நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆகியோரின் முக்கிய பொறுப்பாகும் என அவர் மேலும் தெரிவித்தார்.

## மலையக மக்கள் முன்னணி ஒருபோதும் அரசுடன் இணையாது...

தலைவரும், நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான கலாநிதி வே. இராதா கிருஷ்ணன் தெரிவித்தார்.

அரசியலமைப்பின் 20ஆவது திருத்தச்சட்டத்துக்கு ஆதரவாக வாக்களித்த அரவிந்தகுமார் எம்.பியை கட்சியை விட்டு நீக்குவதற்கும், அவர் வகிக்கும் பதவிகளை பறிப்பதற்கும் மலையக மக்கள் முன்னணி நடவடிக்கை எடுத்துள்ளது. இதற்கு மத்திய செயற்குழு மற்றும் தேசிய சபை ஆகியன ஒப்புதல் வழங்கிய பின்னர் இவ்விவகாரம் தொடர்பில் இராதாகிருஷ்ணன் ஊடகங்களுக்கு விளக்கமளித்தார்.

மலையக மக்கள் முன்னணியின் மத்திய செயற்குழு மற்றும் தேசிய சபையின் கூட்டம் கூடியது. இதன்பிறகே இந்த கருத்தை இராதா கிருஷ்ணன் தெரிவித்தார்.

இதன்போது அவர் கூறியவை வருமாறு,

'தெரிந்து துரோகம் செய்தவர்களிடம் நியாயம் கேட்காதே, அவர்கள் செய்த தவறுக்கு ஆயிரம் பதில்களை சொல்வார்கள் என ஹிட்லர் குறிப்பிட்டுள்ளார். இதன்படி அரவிந்தகுமார் எம்.பியும் தெரிந்தே தவறு செய்துள்ளார். அந்த தவறை திருத்திக்கொள்வதற்காக எம்மால் முன்வைக்கப்பட்ட நிபந்தனைகளை அவர் ஏற்கவில்லை. அரசுக்கான ஆதரவை விலக்கிக் கொண்டு பகிரங்கமாக மன்னிப்பு கோருமாறு கேட்டோம். அவர் அதனை செய்யவில்லை.

இந்நிலையில் அவருக்கு எதிரான ஒழுக்காற்று நடவடிக்கையை நாம் படிப்படியாக முன்னெடுத்தோம். இதனால் சிறு தாமதம் ஏற்பட்டது. இது தொடர்பில் ஐக்கிய மக்கள் சக்தி மற்றும் தமிழ் முற்போக்கு கூட்டணியிலுள்ள இதர பங்காளிக்கட்சிகள் கேள்வி எழுப்பின. அதிருப்தியையும வெளியிட்டன. தற்போது எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கை மேற்படி தரப்புகளுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது. அக்கட்சிகளும் குறித்த தீர்மானத்தை வரவேற்றுள்ளன.

அதேபோல அரவிந்தகுமார் எம்.பியை நான் தான் வழிநடத்துகின்றேன், அவருக்கு பின்னால் செயற்படுகின்றேன். அரசுடன் டீல் இருப்பதால் தான் நடவடிக்கை எடுக்கப்படவில்லை, எடுக்கவும்படாது என சிலர் விமர்சனங்களை முன்வைத்தனர். இதனால் எனக்கும் களங்கம் ஏற்பட்டது. தற்போது அந்த களங்கமும் நீங்கியுள்ளது .

எனக்கு அரசுடன் 'டீல்' இல்லை .எமது கட்சி அரசுடன் இணையாது. ஐக்கிய மக்கள் சக்தியுடன் இணைந்து பயணிக்கும். தமிழ் முற்போக்கு கூட்டணியில் அங்கம் வகிக்கின்றோம். அரவிந்தகுமார் எம்.பியால் சிறு விரிசல் ஏற்பட்டிருந்தது. தற்போது அதுவும் முடிவுக்கு வந்துள்ளது.பதுளை மாவட்டத்தில் இருந்து சந்தா வசூலிக்கப்படாலும் கடந்தகாலங்களில் அது கட்சிக்கு வந்து சேரவில்லை. பதுளையில் கட்சி கூட்டங்களும் இடம்பெறவில்லை. எனவே, வருமானம் முக்கியமல்ல. எமது கட்சியை அங்கு பலப்படுத்தவேண்டும். அதற்காக கட்சி உறுப்பினர்கள் ஒன்றிணைய வேண்டும்.' என்றார்.

## பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரையான பேரணி சமர்ப்பணம்...

செய்யப்பட்ட வழக்கு பருத்தித்துறை நீதவான் நீதிமன்றத்தில் நேற்று திங்கட்கிழமை(22) விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. வழக்காளிகளான பொலீசார் சார்பில் பிரதம மன்றாடியார் அதிபதி மாதினி விக்னேஸ்வரன், ருவான் குணசேகர,மாதவ தென்னக்கோண் ஆகியோர் ஆஜராகி இருந்தனர்.

பிரதிவாதிகள் சார்பில் ஜனதிபதி சட்டத்தரணி எம். ஏ. சுமந்திரன், திருக்குமரன், சயந்தன், மணிவண்ணன் உள்ளிட்ட 11 சட்டத்தரணிகள் முன்னிலையாகியிருந்தனர்.

பருத்தித்துறை, வல்வெட்டித்துறை பொலீசார்தாக்கல் செய்யப்பட்ட வழக்கு மேற்கொண்டு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளக்கூடாது என பிரதிவாதிகள் சார்பில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கிற்கு பொலீசார் சார்பில் பிரதி மன்றாடியார் பூர்வாங்க ஆட்சேபனை தெரிவித்தார். தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கில் சந்தேக நபர்களாக எவரும் பெயர் குறிப்பிடப்படவில்லை. வழக்கை தாக்கல் செய்தவர்களுக்கான தகைமையும் அவர்களுக்கு கொண்டிருக்கவில்லை. பொலீசார் இது தொடர்பாக பி அறிக்கை மட்டுமே தாக்கல் செய்து உள்ளார்கள். எனவே விசாரணையை தொடர முடியாது என பிரதிவாதிகள் சார்பில் கோரமுடியாது என தெரிவித்திருந்தார்.

சந்தேகநபர்களை பெயர் குறிப்பிடப்படாமல் இருந்தாலும் நீதிமன்ற அவமதிப்பை புரிந்துள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளதால் அவர்கள் வழக்கீட்டு தகமையை கொண்டிருப்பதாக பிரதிவாதிகள் சார்பில் ஆஜரான சட்டத்தரணிகள் தெரிவித்தனர். ஒரு புலன் விசாரணைகளை ஆரம்பிக்க அடிப்படை சட்டங்கள் உள்ளன. அவைகள் பூர்த்தி செய்யப்படாத நிலையில் நீதிமன்ற நடவடிக்கைகள் ஆரம்பிக்க முடியாது. என்பதை கடந்த தவணை போலவே இம்முறையும் பிரதிவாதிகள் சார்பில் சமர்ப்பணம் செய்யப்பட்டது.

அரசதரப்பின் பூர்வாங்க ஆட்சேபனையைத் தொடர்ந்து எழுத்து மூல ஆட்சேபனையை வழங்க அரசதரப்பு கேட்டுக் கொண்டதற்கிணங்க இருதரப்பும் எழுத்துமூல சமர்ப்பணங்களை வழங்க 4 வார கால அவகாசம் நீதிமன்றத்தால் வழங்கப்பட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து இருதரப்பு பூர்வாங்க ஆட்சேபனைகள் தொடர்பாக மே மாதம் 3ஆம் திகதி நீதிமன்றம் உத்தரவு ஒன்றை பிறப்பிக்கும் என மன்று அறிவித்துள்ளது.

## கல்லறைகளில் ஏறி மிதித்து நாங்கள் பிழைப்புவாத அரசியலை...

திட்டத்திற்கு அமைய முனைக்காடு கிராமத்தில் வீடொன்று அமைப்பதற்கான அடிக்கல் நேற்று திங்கட்கிழமை நாட்டி வைக்கப்பட்டது. அந்நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே இதனைக்குறிப்பிட்டார்.

இராஜாங்க அமைச்சர் தொடர்ந்தும் உரையாற்றுகையில், 2015ம் ஆண்டு வந்த நல்லாட்சி அரசாங்கத்திலேயே பொருத்து வீட்டுத்திட்டம் கொண்டுவரப்பட்டது. இது வடக்கு, கிழக்கு மக்களுக்கு வரப்பிரசாதமாக இருந்தது. குறிப்பாக வடக்கு கிழக்கு மாகாணத்திற்கு 65ஆயிரம் வீடுகள் வழங்கப்படவிருந்தன. ஆனால் நல்லாட்சி அரசாங்கம் ஒருவீட்டைக்கூட கட்டவில்லை. 65ஆயிரம் வீடுகளும் கட்டப்பட்டிருந்தால் கிழக்கு மாகாணத்தில் 80வீதமான மக்களின் வீட்டுப்பிரச்சினை நீக்கப்பட்டிருக்கும். ஆனால் தற்போதைய அரசாங்கத்தின் மூலமாக, முதற்கட்டமாக 100வீடுகளை மட்டக்களப்புக்கு கொண்டுவந்துள்ளோம்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் பல்வேறு பிரச்சினைகள் உள்ளன. குறிப்பாக 52ஆயிரம் வீட்டுத்தேவைகளும், 59ஆயிரம் மலசலகூடமும் தேவையாக உள்ளன. இம்மாவட்டத்திலே உள்ள இவ்வாறான பிரச்சினைகளையும், குடிநீர், மின்சார வசதி போன்ற பிரச்சினைகளையும் தீர்ப்பதற்கான முன்னெடுப்புக்களை இவ்வாட்சிக்காலத்திலே மேற்கொள்வோம்.

கிழக்கு மாகாணத்தில் 58.9வீத சமூகமாக காணப்பட்ட தமிழர்கள். இன்று 38.6வீதமாக மாறியிருக்கின்றனர். நில, கல்வி, பொருளாதாரம் என பல்வேறு துறைகளிலும் வீழ்ச்சி கண்டுள்ளோம். இவ்வாறான துறைகளை கட்டியெழுப்ப வேண்டிய கடமை எமக்கிருக்கின்றது. அபிவிருத்தி சார்ந்த அரசியலை தான் தற்காலத்தில் முன்னெடுக்க வேண்டி உள்ளது. ஆனாலும், சில திணைக்களங்கள் இம்மாவட்டத்தில் உள்ள நிலங்களை கையகப்படுத்துகின்ற வேலைகளை செய்துவருகின்றன. அவ்வாறான செயற்பாடுகளை நிறுத்தி வருகின்றோம். எம்மக்களின் இருப்பு பாதுகாப்பட வேண்டும் என்பதில் உறுதியாக இருக்கின்றோம் என்றார்.

## கிழக்கில் ஏறத்தாழ மூன்றில் ஒரு பகுதி நிலம் எம்மிடம் இருந்து...

யுத்தமாக இன்று மாறியிருக்கிறது. நிலம் மட்டுமன்றி, நிலத்துடன் சேர்த்து, எமது வாழ்வும், அடையாளமும், வரலாறும் சேர்த்தே அழிக்கப்படுகிறது. இது ஒரு பெரும் மிகப்பெரும் மனித உரிமை மீறல் ஆகும். அரசாங்கங்கள் மேற்கொண்ட இந்த இந்த மனித உரிமை மீறல்களே தமிழ் மக்கள் தமது நிலத்தையும், வாழ்வையும் , அடையாளத்தையும் பாதுகாப்பதற்காக ஆயுத போராட்டத்தை ஆரம்பிப்பதற்கு காரணமாக அமைந்தது என பாராளுமன்ற உறுப்பினர் நீதியரசர் விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

தமிழர்தாயகத்தை இழத்தல் தமிழர் நிலத்தை பாதுகாப்பதற்கான உபாயங்களை வகுத்தலும் பிரச்சினைகளை இனம்காணுதலும் என்ற தலைப்பிலான சர்வதேச மாநாடு சனிக்கிழமை சூம் தொழில்நுட்பம் மூலம் நடைபெற்றது.

இதில் நீதியரசர் விக்கினேஸ்வரன் தொடர்ந்து உரையாற்றுகையில்

வடக்கு கிழக்கில் தமிழ் மக்களின் பாரம்பரிய நிலம், வாழ்க்கை மற்றும் அடையாளம் ஆகியவற்றை நிர்மூலம் செய்துவரும் நில ஆக்கிரமிப்பில் இருந்து எம்மை பாதுகாப்பதற்கும், அதனை தடுப்பதற்குமான வழிவகைகளை ஆராயும் பொருட்டும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இந்த மாநாட்டில் தமிழ் தேசிய கூட்டமைப்பின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினரும் முன்னாள் எதிர்க்கட்சி தலைவரும் மூத்த அரசியல் தலைவருமான ஆர். சம்பந்தன் அவர்கள் கலந்துகொண்டிருப்பது மிகவும் பொருத்தமானது. என்னை அரசியலுக்கு கொண்டுவந்த சம்பந்தன் அவர்களுடன் இணைந்து இந்த மாநாட்டை நான் ஆரம்பித்து வைப்பதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

தமிழ் மக்கள் இந்த நாட்டின் சுதேச (முதலாவது) குடிமக்கள். 3000 ஆண்டுகளுக்கு மேலாக நாம் இந்த நாட்டில் வாழ்ந்துவருகின்றோம். அந்நியர்களின் காலனியாதிக்கம் 1505 ஆம் ஆண்டு ஏற்படும்வரை வடக்கு மற்றும் கிழக்கு பகுதிகளின் நிலப்பரப்பு தமிழ் மன்னர்களின் முழுமையான ஆளுகையின் கீழ் செழிப்பாக இருந்தது. பிரித்தானியர்களின் ஆட்சியின்போது 1833 ஆம் ஆண்டு இலங்கையின் நிர்வாகம் ஒன்றாக்கப்பட்டு பின்னர் 1948 ஆம் ஆண்டு சுதந்திரம் கிடைத்த பின்னர் அதிகாரம் சிங்கள மக்களின் கைகளில் ஒப்படைக்கப்பட்ட நாள் முதல் எமது நிலங்கள் அதிகார பலத்தின் மூலம் சிங்கள அரசாங்கங்களினால் அபகரிக்கப்பட ஆரம்பிக்கப்பட்டது.

ஆயுத போராட்டம் 2009ஆம் ஆண்டு ஒரு பெரும் இனஅழிப்புடன் முடிவுக்கு கொண்டுவரப்பட்டபோதிலும், எமக்கு எதிரான நில ஆக்கிரமிப்பு யுத்தம் இன்னமும் நிற்கவில்லை. மாறாக, மேலும் தீவிரம் அடைந்துள்ளது. எமது மக்களுக்கு எதிரான யுத்தத்தில் ஈடுபட்ட இராணுவம், வடக்கு கிழக்கில் தற்போது எமது நிலங்களை ஆக்கிரமித்துள்ளது. அபிவிருத்தி, தொல்பொருள் ஆய்வு, காடுகள் ஒதுக்கீடு, வன விலங்குகள் சரணாலயம், பறவைகள் சரணாலயம் என்ற போர்வைகளில் தொல்பொருள் ஆராய்ச்சி திணைக்களம், வனவிலங்குகள் திணைக்களம், மகாவலி அதிகாரசபை, காட்டிலாகா, வீடமைப்பு அதிகாரசபை ஆகிய திணைக்களங்கள் உட்பட பல்வேறு அரச திணைக்களங்கள் எமக்கு எதிரான இந்த நில ஆக்கிரமிப்பு யுத்தத்தில் முழு வீச்சில் ஈடுபட்டுள்ளன.

இதனை அண்மையில் அமெரிக்காவின் ஓக்லாந்து நிறுவனம் வெளியிட்ட முடிவற்ற போர் என்ற ஆய்வு அறிக்கையில் ஆதாரங்களுடன் வெளியிட்டது.

இலங்கையில் நடைபெறும் நில ஆக்கிரமிப்பு பற்றி ஆராய்ச்சி செய்த இஸ்ரேலிய அறிஞரான ஓரன் யிட்ச்பச்சேல் என்பவர் இலங்கையை இனநாயக நாடு என்று விபரித்திருக்கிறார். தனி ஒரு இனத்தின் மேலாதிக்கத்தை நாடு முழுவதும் ஏற்படுத்தும் நோக்கத்துடன் செயற்படும் அரசுகளை இனநாயக நாடு என்று அவர் விளக்கம் அளிக்கிறார்.

1948 ஆம் ஆண்டு சுதந்திரம் கிடைத்தது முதல் மிகவும் நுட்பமான முறையில் ஒரு இனநாயக நாடாக கட்டமைக்கப்பட்டுவருகின்றது. இலங்கையின் இத்தகைய இனநாயக கட்டமைப்பே இந்த நாட்டில் ஸ்திரமற்ற தன்மை, இன முரண்பாடுகள், ஆயுத யுத்தம் மற்றும் மனித உரிமைகள் மீறல்களுக்கு காரணமாக இருந்து வருகின்றது. ஆகவே, இந்த உண்மையை புரிந்துகொள்ளாமல் மேற்கொள்ளப்படும் எந்த ஒரு சமாதான முயற்சிகளோ, பொறுப்புக்கூறல் முயற்சிகளோ அல்லது நீதிக்கான முயற்சிகளோ வெற்றி அளிக்கப்போவதில்லை. இதனை சர்வதேச சமூகம் நன்றாக புரிந்துகொள்ள வேண்டும். மனித உரிமைகள் பாதுகாக்கப்படாமல் சமாதானத்தை அடைய முடியாது, அதேபோல, மனித உரிமைகளை பாதுகாப்பதற்கும் மேம்படுத்துவதற்கும் சமாதானம் அவசியம். இந்த இரண்டும் ஒன்றோடு ஒன்று சார்ந்துள்ளன. நில உரிமைகள் மிக முக்கியமான மனித உரிமைகள் ஆகும். ஒரு இனத்தின் அடையாளம், வாழ்வு, செழிப்பு ஆகியவற்றின் உயிர் மூலமாக இருப்பது அந்த இனத்தின் பாரம்பரிய நிலம். வடக்கும் கிழக்கும் எமது பாரம்பரிய பிரதேசங்கள். வடக்கும் கிழக்கும் எமது தாயகம். எமது இந்த தாயக நிலம் எம்மிடம் இருந்து அபகரிக்கபப்டுவது என்பது எமது இனம் அழிக்கப்படுவதற்கு சமனானது. ஆகவே தான் நில அபகரிப்பு ஒரு இனப்படுகொலை ஆகின்றது.

அதனால்தான், எமது பாரம்பரிய வாழ்விடங்களான வடக்கையும் கிழக்கையும் பாதுகாக்கும் வழிமுறைகளை, சவால்களை ஆராய்வதற்காக ''தமிழர் தாயகத்தை இழத்தல்'' என்ற தலைப்பில் இன்றைய இந்த சர்வதேச மாநாட்டை நாம் ஏற்பாடு செய்துள்ளோம்.

இந்த மாநாடு ஒரு ஆரம்பம். எமது நிலத்தை நாம் பாதுகாப்பதற்கு சர்வதேச மட்டத்திலும், உள்ளூர் மட்டத்திலும் நாம் மேற்கொள்ளக்கூடிய வழிவகைகளையும், உபாயங்களையும் வகுத்து செயற்படும் பொருட்டு தொடர்ச்சியாக பல நிகழ்வுகள் நடைபெறும். எமது இந்த நில மீட்பு போராட்டத்துக்கு சர்வதேச சமூகம் எல்லா வகையான ஆதரவையும் ஒத்துழைப்பையும் வழங்கவேண்டும் என்று இந்த சந்தர்ப்பதில் வேண்டுகோள் விடுக்கின்றேன் என்றார்.

## ஓட்டமாவடி பிரதேச சபை உப தவிசாளர்...

யூ.எல்.அஹ்மட் லெப்பை தெரிவு செய்யப்பட்டார்.

சுழற்சி முறையில் உறுப்பினர்களை நியமிப்பது என்ற ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் தீர்மானத்துக்கு அமைவாக, ஏ.எச்.நுபைல் என்பவருக்கு விட்டுக்கொடுப்பு செய்யவே தான் இராஜினமா செய்துள்ளதாக யூ.எல்.அஹ்மட் லெப்பை தெரிவித்தார்.

இராஜினாமா செய்யும் நிகழ்வில், புதிய உறுப்பினராக பதவியேற்கவுள்ள ஏ.எச்.நுபைல், வாகரை பிரதேச சபை உறுப்பினர் எஸ்.எம்.தாஹிர், ஊடகவியலாளர் எம்.ரீ.எம்.பாரிஸ், மட்டக்களப்பு போதனா வைத்தியசாலை ஊழியர் ஏ.எல்.பைரூஸ் ஆகியோர் கலந்து கொண்டனர்.


SwissLife
Select
சுவிசில் சொந்த வீடு
வாங்க விரும்பும் உறவுகளே,
அவதானமாகச் செயற்படுங்கள்.
உங்கள் கடனுக்கான வட்டி வீதம்
எப்போதும் அதிகரிக்க கூடும்.
எனவே, சரியான வங்கியையும்,
வட்டி வீதத்தையும்
தெரிந்து கொள்ளுங்கள்.
உங்கள் வாழ்வின் சகல
அம்சங்களிலும் உங்களோடு
கரங் கோர்க்கும்
ஒரே ஒரு நிறுவனம்...
மருத்துவ காப்புறுதி
வாகனக் காப்புறுதி
குழந்தைகளுக்கான காப்புறுதி
ஆயுட் காப்புறுதி
சட்டக் காப்புறுதி
Herr Krishnasamy
THILEEPAN
Dipl.Finanzberater IAF
Cicero : 15787
FIDLEG : KT 47598
Swiss Life Select AG
Zweigniederlassug Bern-Köniz
Sägerstrasse 79, 3098 Köniz.
Email : krishnasamy.thileepan@swisslife-select.ch Web : www.swisslife-select.ch
Telefon : 031 915 00 50 Telefax : 031 915 00 60 Handy : 079 889 60 65


SRI JEWELLERY
Swiss, Zürich இல் மிகப்
பிரமாண்டமாய் புதுப்பொலிவுடன்
பரம்பரை பரம்பரையாக
நகைத் தொழிலில்
அனுபவம் பெற்றவர்கள் நாங்கள்
வைர தாலி கொடி, மோதிரம், வளையல்
பெயர் பெண்டன், மற்றும் அனைத்து
நகைகளும் செய்து தரப்படும்.
திருத்த வேலைகளும் உடனுக்குடன்
செய்து தரப்படும்.
+41 43 366 80 09 / +41 79 898 51 01
Mattengasse 17, 8005, Zürich, Swiss
info@srijewellery.ch


Aaran Ayurveda
& Wellness Massage
Weinberg Strasse - 22, 8001 Zurich, Tel: 043 243 60 66
Mobile: 079 940 1510 | 077 982 1291 | www.aaranayurveda.ch
Krankenkasse Anerkannt


உதயகுமார் கல்வி நிலையம்
முனைக்காடு மேற்கு,
கொக்கட்டிச்சோலை
தொடர்புகளுக்கு:
076-1549129
+966539028295
+966502126923
n.uthayakumar1981@gmail.com


SHELVA SWISS
YOUR FUTURE OUR VISION
041 790 64 63 079 514 64 28
வீட்டுக்கடன்
0.62%
தொடக்கம்
10% இல்
சொந்த வீடு கட்ட
அல்லது வாங்க
இருக்கும் வீட்டை வைத்து
இன்னொரு வீட்டை வாங்க...
வீடு வாங்க, விற்க, கட்ட, திருத்த...
வீடு வாங்குவதற்கான
ஆயுட்காப்புறுதி
Architect வேலைகள்
இலங்கையில் வீடுகள், காணிகள்,
விற்க, வாங்க, கட்ட, திருத்த
இலங்கைக்கு போக
வேண்டிய தேவை இல்லை.
SWISS இல் இருந்து
கொண்டே செய்யலாம்.
» கிறங்கன்காசே
» ஆயுட்காப்புறுதி
» பயணக்காப்புறுதி
» சட்டக் காப்புறுதி


MATHE BILDUNGSZENTRUM
கணித கற்கைநெறி மையம்
MBZ
கல்வியே துணை
பள்ளித் தலமைத்தும்
பேறெடுக்கும் பிள்ளைகள்.
அள்ளிப் பெற்றுவரும்
நிறைவான புள்ளிகள்!
உள்ளதை சொல்வதெனில்
எங்ஙனம் சாத்தியம்..
எள்ளளவும் பொய்யில்லை
எட்டிவந்து பாரும்!!
- MATHE BILDUNGSZENTRUM
S.MAHENDIRAN
076 431 83 79
mbz.mahe@gmail.com
Mathe மகேந்திரா-வின் தெளிவான
கற்பித்தலில் திருப்தியுறும் பெற்றோர்கள்.
MATHE மட்டுமல்ல
Deutsch, Französisch, Englisch, Gymi Prüfung
BMS, HMS, FMS, Gymi Probe
அத்தனைக்கும் கீழ்காணும் இடங்களில்
Oerlikon, Uster, Schaffhausen



## கழிவுத் தேயிலை களஞ்சியசாலை சுற்றிவளைப்பு



(க.கிஷாந்தன்)

பூண்டுலோயா கும்பாலொலுவ பகுதியில் மிகவும் சூட்சுமமான முறையில் இயங்கிவந்த கழிவுத் தேயிலை களஞ்சியசாலையொன்றை சுற்றிவளைத்த தலவாக்கலை விசேட அதிரடிப்படையினர், 4 ஆயிரத்து 195 கிலோ கழிவுத் தேயிலையையும் கைப்பற்றியுள்ளனர்.

அத்துடன், சந்தேக நபர்கள் இருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கழிவுத் தேயிலையை குறித்த நிலையத்துக்கு கொண்டு வந்து, தூய தேயிலை என்ற போர்வையில் சந்தைக்கு விற்பனைக்கு அனுப்பட்டுள்ளன என விசேட அதிரடிப்படையினர் தகவல் வெளியிட்டர்.

அத்துடன், கைப்பற்றப்பட்ட கழிவு தேயிலை தூளையும், கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களையும் சட்ட நடவடிக்கைகளின் நிமித்தம் பூண்டுலோயா பொலிஸாரிடம், விசேட அதிரடிப்படையினர் கையளித்தனர்.

# பொது மக்கள், மாணவர்களின் நலன் நோக்காது அமைக்கப்பட்ட ரயில்வே கடவையே விபத்துக்கு முக்கிய காரணம்

## செல்வம் அடைக்கலநாதன் எம்.பி.

(வாஸ் கூஞ்ஞ)

தலைமன்னார் பியரில் இடம்பெற்ற ரயில்வே கடவையானது இவ் வாழ் மக்களினதும் பாடசாலை மாணவர்களின் நலன் நோக்காது இப் பகுதியில் மீள்குடியேறிய மக்களின் நலன் நோக்கி இவ் ரயில்வே கடவை அமைத்ததன் விளைவின் ஒன்றாக இவ் கோர விபத்து ஏற்பட்டுள்ளது என வன்னி பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் இவ்வாறு தெரிவித்தார்.

தலைமன்னார் பியரில் கடந்த செவ்வாய் கிழமை இடம்பெற்ற ரயில் மற்றும் பிரயாணிகளை ஏற்றிச் சென்ற பஸ் வண்டி மோதலில் மாணவர்கள் உட்பட பலர் காயமடைந்ததுடன் ஒரு மாணவன் இறந்துள்ள சம்பவம் தொடர்பாக திங்கள் கிழமை தலைமன்னார் பியரில் தலைமன்னார் மற்றும் பாடசாலை மாணவர்கள் மதத் தலைவர்கள் உள்ளடங்களாக கவனயீர்ப்பு போராட்டம் இடம்பெற்றது.

இவ் கவனயீர்ப்பு போராட்டத்தில் கலந்து கொண்ட வன்னி பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் இங்கு தெரிவிக்கையில்

தலைமன்னார் பியரில் ரயிலுடன் மோதுண்ட போக்குவரத்து பஸ் வண்டியில் ஒரு மாணவன் இறந்ததுடன் 15 மாணவர்கள் காயப்பட்டும் இருக்கின்றார்கள். இதற்கு எதிர்ப்பு தெரிவித்து தலைமன்னார் பியரில் ஒரு கவனயீர்ப்பு போராட்டத்தை நாம் நடத்துகின்றோம்.

இவ்விடயத்தில் பொலிஸார் மிகவும் கவனயீனமாக செயல்பட்டிருப்பது கண்கூடு. அடுத்து இவ் விபத்துக்கு முக்கிய காரணமாக இருப்பது இவ் ரயில்வே கடவைக்கு காவலாளி இல்லாமல் இருந்தது.



மறுபுறம் இங்கு அமைக்கப்பட்டிருக்கும் இவ் ரயில்வே கடவையின் கேற் சரியான முறையில் அமைக்கப்படவில்லை என்பதும் தெளிவாக காணப்படுகின்றது.

இதைவிட இப் பகுதியில் குடியேற்றம் வந்த பிற்பாடு இங்கு இவ் கிராம மக்களின் நலன் நோக்காது இங்கு மீள்குடியேற்றிய மக்களுக்கு சாதகமான முறையிலேயே இவ் கடவைப் பாதை போடப்பட்டதாக இவ் வாழ் மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

உண்மையில் இவ் கடவையை பழைய இடத்திலிருந்து புதிய குடியேற்றத்துக்கு சாதகமாக அமைத்தவர்கள் இவ்விடத்தில் பாடசாலை மாணவர்கள் பொது மக்கள் அதிகமாக நடமாடும் இடம்.

ஆகவே இங்கு பாதுகாப்பை பலமாக பலப்படுத்தியிருக்க வேண்டும். இங்கு நடந்து முடிந்த விடயத்துடன் இதை அப்படியே கைவிட முடியாது.

இந்த இடமானது முக்கியமான இடமாக பார்க்க வேண்டியுள்ளது. இ;வ்விடயமாக என்னால் பாராளுமன்றத்தில் குரல் கொடுக்கப்பட்டு தக்க நடவடிக்கை எடுக்கப்படும். இது விடயமாக இது சம்பந்தமாக சம்பந்தப்பட்ட அமைச்சரைச் சந்தித்து தக்க நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவித்தார்.

# ஓட்டமாவடி பகுதியில் போலியான ஐயாயிரம் ரூபா நாணயத்தாள்

(ந.குகதர்சன்)



வாழைச்சேனை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட ஓட்டமாவடி பகுதியில் வைத்து போலியான ஐயாயிரம் ரூபாய் நாணயத்தாள்களுடன் சந்தேக நபர்ஒருவர் ஞாயிற்றுக்கிழமை இரவு கைது செய்துள்ளதாக வாழைச்சேனை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிதனஞ்ஜய பெரமுன தெரிவித்தார்.

வாழைச்சேனை கடதாசி ஆலை இராணுவப் புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைத்த இரகசியத் தகவலையடுத்து வாழைச்சேனை விஷேட அதிரடிப்படையினருடன் இணைந்து மேற்கொண்ட சுற்றி வளைப்பு நடவடிக்கையில் போது போலியானநாணயத்தாள்களுடன் சந்தேக நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

ஓட்டமாவடி பிரதேசத்திலுள்ள வியாபார நிலையம் ஒன்றினை சோதனை செய்த போது ஒரு இலட்சம் ரூபாய் பெறுமதியான ஐயாயிரம்ரூபாய் போலி நாணயத்தாள்கள் கைப்பற்றப்பட்டுள்ளதுடன், வியாபார நிலையத்தில்கடமையாற்றிய இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இப்பிரதேசத்தில் இன்னும் போலிநாணத்தாள்கள் இருக்கலாம் என்ற சந்தேகத்திலும், இதனுடன் தொடர்புபட்ட வியாபாரிகளுக்கும்தொடர்பு இருக்கலாம் என்ற சந்தேகத்தில் சில வர்த்தக நிலையங்கள் சோதனைக்கு உட்படுத்தப்படவுள்ளதாகவும், போலி நாணயத்தாள்கள் கைப்பற்றப்பட்ட வர்த்தக நிலையத்தின் உரிமையாளர் தலைமறைவானநிலையில் வர்த்தக நிலையத்தில் கடமையாற்றிய இளைஞரே கைது செய்யப்பட்டு விசாரணைகள்இடம்பெறுவதாக வாழைச்சேனை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தனஞ்ஜய பெரமுன தெரிவித்தார்.

அண்மையில் வாழைச்சேனை இராணுவப் புலனாய்வுபிரிவினருக்கு கிடைக்கப்பெற்ற தகவலுக்கமைய அக்கரைப்பற்று பொலிஸ் பிரிவில் நிந்தவூர்ப்பகுதியில் போலி நாணயத்தாள்களுடன் கைது செய்யப்பட்டவர்களிடம் இருந்து கிடைக்கப் பெற்றதகவலின் அடிப்படையிலேயே ஓட்டமாவடியில் மேற்படி சுற்றிவலைப்பு இடம்பெற்றதாக வாழைச்சேனை விஷேடஅதிரடிப் படையினர் தெரிவித்தனர்.

# மாரியம்மன் அறநெறிப் பாடசாலை அங்குரார்ப்பணம்



(ரக்ஸனா)

மட்டக்களப்பு மவாட்டம் போரதீவுப்பற்றுப் பிரதேசத்திற்குட்பட்ட வம்மியடியூற்று கிராமத்தில் மாரியம்மன் அறநெறிப்பாடசாலை ஞாயிற்றுக்கிழமை ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

வம்மியடியூற்று வாணி வித்தியாலயத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ள இவ்வறநெறிப் பாடசாலை ஆரம்ப நிகழ்வில் வாணி வித்தியாலய அதிபர் க.சந்திரகுமார், போரதீவுப்பற்றுப் பிரதேச கலாசார உத்தியோகஸ்த்தர் ஆ.பிரபாகரன், மற்றும் அறநெறிப்பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் உள்ளிட்ட பலரும் இதன்போது கலந்து கொண்டிருந்தனர்.

வாரந்தோறும் ஞாயிற்றுக் கிழமைகளில் சமய அறக்கருத்துக்களை மாணவர்களுக்கு புகட்டுவதற்காக அரசாங்கத்தினால் அநநெறிப்பாடசாலைகள் ஆரம்பிக்கப்பட்டு இயங்கி வருகின்றன. அந்த வகையில் இக்கிராமத்திலுள்ள மாணவர்கள் குறிப்பாக எமது வாணி வித்தியாலயத்தில் பயில்கின்ற அனைத்து மாணவர்களும் வாரந்தோறும் ஞாயிற்றுக்கிழமைகளில் நடைபெறவுள்ள அறநெறிக் கல்வியை கற்று சமூகத்திலும், சமய ஒழுக்க விழுமியங்களிலும் சிறப்புற திகழ வேண்டும் என இதன்போது கலந்து கொண்ட வாணி வித்தியாலய அதிபர் க.சந்திரகுமார் தெரிவித்தார்.

இந்நிலையில் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ள அறநெறிப்பாடசாலை மாணவர்களுக்குரிய சீருடை, மற்றும் புத்தகங்கள், ஆசிரியர்களுக்குரிய சீருடை, கொடுப்பனவுகள், அனைத்தையும் வழங்குவதற்கு நடவடிக்கை எடுப்பதாக இதில் கலந்து கெண்ட போரதீவுப்பற்றுப் பிரதேச கலாசார உத்தியோகஸ்த்தர் ஆ.பிரபாகரன் தெரிவித்தார்.













ஓட்டமாவடி பிரதேச செயலக பிரிவின்சிறுவர் அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் பிரதேச சிறுவர் சபை மற்றும் சிறுவர் கழக அங்கத்தவர்களுக்கானதலைமைத்துவம் தொடர்பான பயிற்சி நெறி செயலகத்தில் இடம்பெற்றது. பிரதேச செயலாளர் வீ.தவராஜா தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் சிறுவர் மேம்பாட்டு உத்தியோகத்தர் திருமதி. எம்.எச்.சபூஸ் பேகம்,சமுர்த்தி சமூக அபிவிருத்தித் உதவியாளர் எம்.என்.எம்.சாஜஹான், சிறுவர் கழக உறுப்பினர்களும் கலந்து கொண்டனர். இதில் வளவாளராக சிறுவர் மேம்பாட்டுஉத்தியோகத்தர் எம்.றுஸைத் கலந்து கொண்டு தலைமைத்துவ பயிற்சிகளை வழங்கினார்.

ந.குகதர்சன்

# ஹாபிஸ் நஸீரின் அரசியல் செயற்பாடுகள் ஜனநாயகத்துக்கு ஆபத்தானவை

## முன்னாள் அமைச்சர் சுபைர்



(றியாஸ் ஆதம்)

கொரோனா வைரஸினால் மரணித்த முஸ்லிம்களின் ஜனாஸாக்கள் தொடர்பில் சர்ச்சையான கருத்துக்களை வெளியிட்டு, நாட்டில் வீன் பிரச்சினைகளை ஏற்படுத்துவதற்கு பாராளுமன்ற உறுப்பினர் ஹாபிஸ் நஸீர் முயல்வதாக, கிழக்கு மாகாண முன்னாள் அமைச்சரும், ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட தலைவருமான எம்.எம்.சுபைர் தெரிவித்தார்.

ஜனாஸா விவகாரம் தொடர்பில் ஓட்டமாவடி பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் பாராளுமன்ற உறுப்பினர் ஹாபிஸ் நஸீர் தெரிவித்த கருத்துக்கள் தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் மேற்கன்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்தும் தெரிவிக்கையில்,

ஜனாஸா பெட்டிகள் மாத்திரமே எரிக்கப்பட்டதாகவும், அதற்குள் மறைவான விடயங்கள் உள்ளதாகவும் பாராளுமன்ற உறுப்பினர் ஹாபிஸ் நஸீர் தெரிவித்த சர்ச்சைக்குறிய கருத்தினால் நாட்டில் பாரிய பிரச்சினைகள் ஏற்பட்டுள்ளது. ஜனாஸா பெட்டிகள் மாத்திரம் எரிக்கப்பட்டிருந்தால், அந்த ஜனாஸாக்களுக்கு என்ன நடந்தது என்பதனை அவர் மக்களுக்கு சொல்ல வேண்டும்.

பாராளுமன்ற உறுப்பினர் ஹாபிஸ் நஸீரின் அண்மமைக்கால அரசியல் செயற்பாடுகள் தொடர்பில் முஸ்லிம் சமூகத்தின் மத்தியில் பல்வேறு எதிர்ப்புக்கள் கிளம்பி வருகிறது. அவற்றை சமாளிப்பதற்காகவே, அவர் இவ்வாறான கருத்துக்களைக்கூறி வருகிறார்.

முஸ்லிம்களுடைய ஜனாஸாக்கள் நெருப்பில் எரிந்த போது, முஸ்லிம் சமூகம் பட்ட துன்பங்கள் வேதனைகள் ஏராளம். ஜனாஸா அடக்கத்தின் பின்னர் முஸ்லிம் சமூகம் தற்போது சற்று ஆறுதல் அடைந்துள்ள நிலையில், சிறுபிள்ளைத்தனமாக அறிக்கைகளை விட்டு, பெரும்பான்மை சமூகத்தை தூன்டி விடுகிறார். நாட்டையும் மக்களையும் குழப்புகின்ற இவ்வாறான செயற்பாடுகளை அவர் கைவிட வேண்டும்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் செல்வாக்கிழந்துவரும் ஹாபிஸ் நஸீர், அந்த செல்வாக்கினை மீளக்கட்டியெழுப்புவதற்காகவே ஜனாஸா விவகாரத்தினை கையிலெடுத்து போலியான அறிக்கைகளை வெளியிட்டு வருகிறார். ஜனாஸா அடக்கத்தில் அரசியல் இலாபம் தேட முயன்று இன்று சிக்கலில் மாட்டியுள்ளார்.

கடந்த ஜனாதிபதி மற்றும் பொதுத் தேர்தலின் போது ராஜபக்ஷ குடும்பத்தை, முஸ்லிம் சமூகத்தின் மத்தியில் இனவாதிகளாக காட்டி, மிக மோசமாக பிரச்சாரம் செய்து வாக்குகளை சூறையாடிய ஹாபிஸ் நஸீர், இப்போது ராஜபக்ஷக்களை புகழ்பாடுவது பதவிகளுக்காகவேயன்றி வேறெதுவுமில்லை.

ஜனநாயகத்துக்கும், சமூகத்திற்கும் ஹாபிஸ் நஸீர் ஆபத்தானவர் அவருக்கு வாக்களிக்க வேண்டாம் என கடந்த பொதுத் தேர்தலின் போது மட்டக்களப்பு மாவட்ட மக்களிடம் கோரிக்கை விடுத்தோம். யாரும் எமது கருத்துக்களுக்கு செவிசாய்க்கவில்லை. அதனால் இன்று அவர் சார்ந்த கட்சிக்கும் தலைமைக்கும் ஆபத்தாக மாறிவிட்டார்.

அற்பசொற்ப சலுகைகளுக்கும், பசப்பு வார்த்தைகளுக்கும் ஏமாற்றமடைந்து வாக்களித்ததனால் இன்று ஒட்டுமொத்த முஸ்லிம் சமூகமும் வெட்கித்தலை குனிந்துள்ளது. பதவிகளுக்காக பொய்களைக்கூறி சமூகத்தை ஏமாற்றுகின்ற ஹாபிஸ் நஸீருக்கு மக்கள் தகுந்த பாடம் புகட்ட வேண்டும்.

ஜனாஸா பெட்டிகள் மாத்திரமே எரிக்கப்பட்டதாகவும், அதற்குள் மறைவான விடயங்கள் உள்ளதாகவும் பாராளுமன்ற உறுப்பினர் ஹாபிஸ் நஸீர் தெரிவித்த கருத்தினால் இனவாதிகள் நீதிமன்றத்தை நாடுகின்ற நிலைமைகள் ஏற்பட்டுள்ளது என்றார்.




# மதங்களின் பன்முகத் தன்மையை மதித்தல், அறிக்கையிடல் ஊடகவியலாளர்களுக்கான செயலமர்வு





கரிதாஸ் எகெட் மற்றும் சர்வமத அமைப்பின் ஏற்பாட்டில் மட்டக்களப்பு மாவட்ட ஊடகவியலாளர்களுக்கு மதங்களின் பன்முகத் தன்மையை மதித்தல், அறிக்கையிடல் என்ற தொனிப்பொருளிலாலான செயலமர்வு ஞாயிற்றுக்கிழமை கரிதாஸ் எகெட் நிறுவன கேட்போர்கூடத்தில் நிறுவனத்தின் திட்ட இணைப்பாளர் கிறிஸ்டி அவர்களின் ஏற்பாட்டில் இடம்பெற்றது.

இச்செயலமர்வில் கரிதாஸ் எகெட் நிறவனத்தின் பணிப்பாளர் அருட்தந்தை ஏ.ஜேசுதாஸன், மட்டக்களப்பு சர்வத அமைப்பின் தலைவர் சிவஸ்ரீ வி.கே.சிவபாலன் குருக்கள், சர்வமத அமைப்பின் பிரதிநிதி மௌலவி சாஜகான், கிழக்குப் பல்கலைக்கழக விரிவுரையாளர் அருட்தந்தை ஏ.ஏ.நவரெட்ணம், தொடர்பாடல் மத்திய நிலைய பிராந்திய நிகழ்ச்சித் திட்டப் பணிப்பாளர் பெனிஸ்னஸ் பேரின்பநாயகம், கிழக்கு ஊடகவியலாளர் ஒன்றியத்தின் தலைவர் ஏ.எல்.தேவதிரன், மட்டக்களப்பு தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியத்தின் தலைவர் வா.கிருஸ்ணகுமார், மட்டக்களப்பு முஸ்லீம் ஊடகவியலாளர் சம்மேளனத்தின் தலைவர் டி.எல்.ஜௌபர்கான் உட்பட ஊடகவியலாளர் பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

இதன்போது கரிதாஸ் எகெட் நிறுவனம் மற்றும் சர்வமத அமைப்புகளின் செயற்பாடுகள் குறித்த கலந்துரையாடல் மேற்கொள்ளப்பட்டதுடன், மதங்களின் பன்முகத்தன்மையை மதித்து அறிக்கையிடல் தொடர்பில் வளவாளர் அருட்தந்தை ஏ.ஏ.நவரெட்ணம் அவர்களாலும், முரண்பாடுகள் மற்றம் வன்முறைகளைக் கையாளுதல், அதனூடான அறிக்கையிடல் தொடர்பில் வளவாளர் பெனிஸ்னஸ் பேரின்பநாயகம் அவர்களாலும் கருத்துகள் பகிரப்பட்டதுடன், ஊடகவியலாளர்களின் கலந்துரையாடல்களும் இடம்பெற்றன.

செயலமர்வின் இறுதியில் பங்குபற்றிய ஊடகவியலாளர்களுக்கான சான்றிதழ்கள் வழங்கி வைக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

# கிழக்கு மாகாண முதலமைச்சின் பிரதம கணக்காளராக முஸ்தபா நியமனம்



கிழக்கு மாகாண உள்ளூராட்சி, கிராமிய அபிவிருத்தி, கிராமிய தொழிற்துறை, சட்டமும் ஒழுங்கும், நிதி, போக்குவரத்து, சுற்றுலாத்துறை, கட்டடங்கள் மற்றும் வீடமைப்பு அமைச்சின் (கிழக்கு மாகாண முதலமைச்சின்) பிரதம கணக்காளராக M.I.M. முஸ்தபா அவர்கள் நியமிக்கப்பட்டு நேற்று தமது பொறுப்புக்களையும் கடமைகளையும் பொறுப்பெற்றுக்கொண்டார்.

M.I.M.முஸ்தபா அவர்கள், 1992 ஆம் ஆண்டு இலங்கை கணக்காளர் சேவையில் இணைந்து கொண்டார்.

யாழ்ப்பாண பல்கலைக் கழகத்தில் வியாபார நிர்வாகதுறையில் பட்டம் பெற்ற இவர், இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகத்தில் பொது நிதி மற்றும் முகாமைத்துவத்தில் பட்டப்பின் டிப்ளோமா பட்டத்தினையும் பெற்றுள்ளார்.

மூதூர் பிரதேச செயலகம், மொனராகலை பிரதேச செயலகம், தேசத்தினை கட்டியெழுப்பும் அமைச்சின் அம்பாறை மாவட்டத்தின் கணக்காளராகவும், அக்கறைப்பற்று பிரதேச செயலகம், அம்பாறை மாவட்ட செயலகத்தின் பிரதம உள்ளக கணக்காய்வாளராகவும், இறுதியாக அம்பாறை மாவட்ட செயலகத்தின் பிரதம கணக்காளராகவும் சேவையாற்றியுள்ள இவர் இன, மத பேதமின்றி மூவின மக்களுடன் சிறந்த மக்கள் சேவையினையாற்றியுள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இப்பதவியேற்பு நிகழ்வில், கிழக்கு மாகாண முதலமைச்சின் செயலாளர் U.L.A.அஸீஸ், கிழக்கு மாகாண திறைசேரியின் கொடுப்பனவு மற்றும் பெறுகையின் பிரதம கணக்காளர் M.கலைஜானசுந்தரம், அட்டாளைச்சேனை பிரதேச செயலகத்தின் உதவி பிரதேச செயலாளர் M.A.C.நஸீல், பொத்துவில் பிரதேச செயலகத்தின் உதவி பிரதேச செயலாளர் Y.றாசித், சம்மாந்துறை பிரதேச செயலக கணக்காளர் I.M. பாரிஸ், திருக்கோவில் பிரதேச செயலக கணக்காளர் M.அரசரெத்தினம், பொத்துவில் பிரதேச செயலக கணக்காளர் A.B.அப்துல் றஹ்மான், லாகுகல பிரதேச செயலக கணக்காளர் S.M.ஹாறூன், அக்கறைப்பற்று பிரதேச செயலக கணக்காளர் S.L.சத்தார் மிர்சா, மற்றும் பொத்துவில் ஆதார வைத்தியசாலையின் பிரதம வைத்திய ஆய்வுகூட தொழிநுட்பவியலாளர் M.M.றிம்சான் ஆகியோரின் பங்குபற்றலுடன் நடைபெற்றது.

பொதுச்சேவை ஆணைக்குழுவின் வருடார்ந்த இடமாற்ற கட்டளைக்கிணங்க இவ் விடமாற்றம் இடம் பெற்றுள்ளது என்பது குறிப்பிட்டத்தக்கது.

# அனர்த்த விழிப்புணர்வு தொடர்பிலான கலந்துரையாடல்

(ஹஸ்பர் ஏ ஹலீம்)



தம்பலகாமம் பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட பாலம்போட்டாறு கிராம சேவகர் பிரிவில் அனர்த்த பாதுகாப்பு தொடர்பிலான விழிப்புணர்வு இடம் பெற்றது.

குறித்த விழிப்புணர்வு நிகழ்வானது நேற்றுபத்தினிபுரம் கிராம அபிவிருத்தி சங்க கட்டிடத்தில் பிரதேச செயலாளர் ஜெ.ஸ்ரீபதி அவர்களின் வழிகாட்டலின் கீழ் இடம் பெற்றது.

அனர்த்தங்களின் போது செயற்படும் விதம் அனர்த்த வகைகள் உட்பட பல விளக்கங்களை மாவட்ட அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் உதவி பணிப்பாளர் சுகுனதாஸ் அவர்கள் தெளிவுபடுத்தியதுடன் அப் பகுதியில் உள்ள கிராமிய மட்ட அனர்த்த குழு அமைப்பது தொடர்பிலும் இதன் போது ஆராயப்பட்டன.

அனர்த்த நிலைமைகள் குறித்த கிராம மட்ட அமைப்புக்களின் பிரதிநிதிகளால் இதன் போது முன்னுரிமைப்படுத்தி அடையாளப்படுத்தப்பட்டன.

இதில் பிரதேச செயலக பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர், கிராம அதிகாரி, சமுதாய நிறுவனம்சார் அமைப்புக்களின் பிரதிநிதிகள் என பலர் கலந்து கொண்டார்கள்.

# பொதுக்கிணறு மக்களிடம் கையளிப்பு





(ரக்ஸனா)

மட்டக்களப்பு மாவட்டத்திலிருந்து இயங்கி வரும் தன்னார்வ தொண்டு நிறுவனமான அருவி பெண்கள் வலையமைப்பானது மட்டக்களப்பு அக்குராணை, மினுமினுத்தவெளி மற்றும் முறுத்தானை ஆகிய கிராம மக்களின் குடிநீர் பிரச்சனையினை தீர்த்து வைக்கும் முகமாக பொது கிணறு ஒன்றினை நிறுவி கையளிக்கும் நிகழ்வு நேற்று முன்தினம் நடைபெற்றது.

அருவி பெண்கள் வலையமைப்பானது மட்டக்களப்பு மாவட்டத்தில் பல பிரதேச செயலகபிரிவுகளில் பெண்கள் சார்ந்த வேலைத்திட்டங்கள் மற்றும் சமூக மேம்பாட்டுக்கான உட்கட்டமைப்பு அபிவிருத்தி மாணவர்களின் கல்வி சுகாதாரம் சமூக பாதுகாப்பு போன்ற பல்வேறு வேலைத்திட்டங்களை மாவட்ட செயலகத்துடன் இணைந்து முன்னெடுத்து வருகின்றது.

அந்தவகையில் மட்டக்களப்பு கோரளைப்பற்று தெற்கு கிரான் பிரதேச செயலகப்பிரிவில் உள்ள அக்குராணை மினுமினுத்தவெளி மற்றும் முறுத்தானை ஆகிய கிராம மக்களின் அத்தியாவசிய தேவையான குடிநீர் வசதியினை பெற்றுக்கொடுப்பதற்காக 7 இலட்சம் ரூபா செலவில் கிராமத்துக்கான பொது கிணறு மக்கள் பாவனைக்காக கையளிக்கப்பட்டதுடன் பெண்களுக்கான சுகாதார பொருட்கள் அடங்கிய பொதிகளும் வழங்கி வைக்கப்பட்டது.

சட்டத்தரணியும் அருவிப்பெண்கள் வலையமைப்பின் பணிப்பாளருமாகிய மயூரி ஜனன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் கே.கருணாகரன் கோரளைப்பற்று தெற்கு கிரான் பிரதேச செயலக உதவி பிரதேச செயலாளர் எஸ்.யோகராஜா அகம் மனிதாபிமான வள நிலைய இணைப்பாளர் க.லவகுசராஜா கிராம சேவை உத்தியோகஸ்தர் சமுர்த்தி உத்திளோகஸ்தர் கிராம அபிவித்திச்சங்க தலைவர்கள் மற்றும் பொது மக்கள் என பலரும் கலந்துகொண்டிருந்தனர்.

இதனைத்தொடர்ந்து அரசாங்க அதிபருடன் அக்கிராம மக்களின் தேவைப்பாடுகள் தொடர்பான கலந்துரையாடல் இடம்பெற்றது இதன் போது பாடசாலைக்கான ஆசிரியர் மற்றும் வகுப்பறை பற்றாக்குறை தொடர்பாகவும் வைத்தியசாலைக்கு நிரந்தரமான வைத்தியர் மற்றும் மருத்துவ வசதி தேவை தொடர்பாகவும் மற்றும் பாதுகாப்பு தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது.

இவற்றுள் பிரதான விடயமாக வீதி போக்குவரத்து வசதி மிகவும் கடினமானதாகவும் பாதுகாப்பற்றதாகவும் காணப்படுகின்றமையால் அவற்றினை நிவர்த்தி செய்யும் முகமாக மூக்கிரையான் ஓடைக்கான பாலம் அமைப்பது தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டு இக்கோரிக்கைகளை முன்வைத்து மாவட்ட அரசாங்க அதிபரிடம் மகஜர் ஒன்றும் கையளிக்கப்பட்டது.

மேற்படி நிகழ்வுக்கான விஜயத்தினை மேற்கொண்ட அரசாங்க அதிபர் நேரடியாக அந்த குறைகளை கண்டறிந்ததுடன் அதற்கான உரிய நடைமுறைகளை முன்னெடுத்து செல்வதற்கான ஆலோசனைகளையும் வழங்கினார்.

# “சுபீட்சத்தின் நோக்கு” வீதி நிர்மாணப் பணிகள் அக்கரைப்பற்றில் ஆரம்பித்து வைப்பு!





(நூருள் ஹுதா உமர்)

அரசாங்கத்தின் "சுபீட்சத்தின் நோக்கு" கருப்பொருளுக்கமைய ஒரு இலட்சம் கிலோ மீட்டர் வீதிகளை அபிவிருத்தி செய்யும் வேலைத்திட்டத்தின் கீழ், அக்கரைப்பற்று 20, 21 பொது வீதி நிர்மாணப் பணிகள் அக்கரைப்பற்று மாநகர முதல்வர் அதாஉல்லா அகமட் ஸகியின் தலைமையில் நேற்று (22) ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் அக்கரைப்பற்று மாநகர சபை உறுப்பினர்களான அக்கரைப்பற்று அனைத்து பள்ளிவாசல்கள் சம்மேளன தலைவர் எஸ்.எம்.சபீஸ், எம்.ஐ.சஹாப்தீன், மாநகர சபையின் பிரதம பொறியியலாளர் ஜே.ஆகில், வீதி அபிவிருத்தி அதிகார சபை தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள், மாநகர சபை உத்தியோகத்தர்கள், பிரதேச முக்கியஸ்தர்கள்,சமூக நலன்விரும்பிகள் பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

# சாய்ந்தமருது பிரதேச இளைஞர் கழகங்களின் சம்மேளன தலைவராக சப்னாஸ் தெரிவு



(நூருல் ஹுதா உமர்)

தேசிய இளைஞர் சேவைகள் மன்ற சாய்ந்தமருது பிரதேச இளைஞர் கழகங்களின் சம்மேளன விசேட கூட்டம் சாய்ந்தமருது இளைஞர் தொழில் பயிற்சி நிலையத்தில் ஞாயிற்றுக்கிழமை (21) இடம்பெற்றது. இதன்போது அண்மையில் பதவி வெற்றிடமான சாய்ந்தமருது பிரதேச சம்மேளன தலைவர் பதவிக்கு புதிய தலைவராக மாவட்ட இளைஞர் சேவைகள் அதிகாரி முபாரக் அலி மற்றும் சாய்ந்தமருது இளைஞர் சேவை அதிகாரி எம்.டீ.எம். ஹாறூன் மற்றும் இளைஞர் பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.எம். றிஹான் முன்னிலையில் சபையோரினால் பிளையிங் கோர்ஸ் இளைஞர் கழக தலைவரும் குரு ஊடக வலையமைப்பின் நிகழ்ச்சி தயாரிப்பாளருமான சி.எம். முஹம்மட் சப்னாஸ் தெரிவு செய்யப்பட்டார்.

இக்கூட்டத்தில் சாய்ந்தமருது பிரதேச சம்மேளனத்தில் அங்கம் வகிக்கும் இளைஞர் கழகங்களின் தலைவர், செயலாளர் மற்றும் முக்கிய உறுப்பினர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

# சிரேஸ்ட ஊடகவியலாளர் நிந்தவூர் எம். சஹாப்தீன் கலை, இலக்கியத்திற்கான விருது வழங்கி கௌரவிக்கப்பட்டார்



(எம்.ஐ.எம்.அஸ்ஹர்)

கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் அண்மையில் நிந்தவூரைச் சேர்ந்த சிரேஸ்ட ஊடகவியலாளர் எம்.சஹாப்தீன் கலைஞர் சுவதம் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் கலை, இலக்கியத்திற்கான விருதும், சான்றிதழும் வழங்கி கௌரவிக் கப்பட்டார்.

நிந்தவூர் பிரதேச செயலகத்தின் கலாசார திணைக்களப் பிரிவினால் ஒழுங்கு செய்யப்பட்ட இக் கௌரவிப்பு வைபவம் நிந்தவூர் பிரதேச செயலாளர் ரீ.எம். எம்.அன்ஸார் தலைமையில் நடைபெற்றது. பிரதம அதிதியாக அம்பாரை மாவட்ட மேலதிக செயலாளர் ஏ.எம்.அப்துல் லத்தீப் கலந்து கொண்டார். சிறப்பு அதிதியாக அம்பாரை மாவட்ட கலாசார உத்தியோகத்தர் ரி.எம். றின்சான் உட்பட நிந்தவூர் பிரதேச செயலகத்தின் உத்தியோகத்தர்கள் பலரும் கலந்து கொண்டனர். இதன் போது 15 கலைஞர்கள் கௌரவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

ஊடகவியலாளர் எம். சஹாப்தீன் கடந்த 25 வருடங்களுக்கு மேலாக சுதந்திர ஊடகவியலாளராக செயற்பட்டுக் கொண்டிருக்கின்றார். முஸ்லிம் அரசியல் தொடர்பான பல ஆய்வுக் கட்டுரைகளையும், விமர்சனக் கட்டுரைகளையும் பத்திரிகைகளில் எழுதிக் கொண்டிருக்கின்ற ஒருவராவார்.

பாடசாலை காலம் முதல் கவிதை எழுதுதல், ஓவியம் வரைதல் ஆகியவற்றில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் இவர், மேடை நிகழ்ச்சிகளை தொகுத்து வழங்கும் அறிவிப்பாளராகவும் திகழ்ந்து கொண்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

# மருதமுனையில் ஓய்வுபெற்ற அதிபர் சமதுவின் கல்விப்பணி நூல் வெளியீடு




(ஏ.எல்.எம்.ஷினாஸ்)

மருதமுனை பிரதேசத்தை சேர்ந்த ஓய்வு பெற்ற அதிபர்அல்-ஹாஜ்.ஏ.எம்.ஏ.சமது அவர்கள், முஸ்லிம் சமூகத்தின் கல்வி, சமய, சமூக, கலை, இலக்கியம், அரசியல் என பன்முக பணிகளிலும் இறுக்கமாக கால் பதித்த ஒரு முதுசம் ஆவார். குறிப்பாக கல்வித்துறையில் அவர் ஆற்றிய பணி அளப்பரியதாகும்.

ஓய்வு பெற்ற அதிபர் அல்-ஹாஜ். ஏ.எம்.ஏ.சமது அவர்கள் வாழ்ந்து கொண்டிருக்கின்ற பொழுதே அவர் பற்றிய “கல்விப் பணியில் .ஏ.எம்.ஏ.சமது அதிபர்“ எனும் நூல் வெளியீட்டு நிகழ்வு எதிர்வரும் 2021.04.03ஆம் திகதி மருதமுனை ஷம்ஸ் மத்திய கல்லூரியின் வி.எம்.ஐ.சி. எச் மண்டபத்தில் பாடசாலையின் அதிபர் ஏ.எல். சக்காப் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் கிழக்கு மாகாண கல்விப்பணிப்பாளர் எம்.ரி.ஏ.நிஸாம் பிரதம அதிதியாக கலந்து கொள்ளவுள்ளதுடன் கௌரவ அதிதிகளாக பேராசிரியர் எம்.எஸ்.எம்.அனஸ், தென்கிழக்கு பல்கலைக் கழக அரசியல் துறைத் தலைவர் கலாநிதி எம்.எம். எம்.பாஸில் ஆகியோர் கலந்து கொண்டு உரையாற்றவுள்ளார். நூல் பற்றிய வெளியீட்டுரையை நூலாசிரியரும் விரிவுரையாளருமான ஏ.ஜெ.எல்.வஸீல் நிகழ்த்த வுள்ளார்.

# ஆலையடிவேம்பு பிரதேச செயலகத்தின் கணக்காளராக கணபதிப்பிள்ளை பிரகஷ்பதி



(வி.சுகிர்தகுமார்)

ஆலையடிவேம்பு பிரதேச செயலகத்தின் கணக்காளராக அக்கரைப்பற்று மண்ணைச்சேர்ந்த கணபதிப்பிள்ளை பிரகஷ்பதி மாவட்ட செயலகத்தினால் நியமிக்கப்பட்டுள்ளார்.

பதில் கணக்காளராக கடந்த சில மாதங்களாக ஆலையடிவேம்பு பிரதேச செயலகத்தில் கடமையாற்றிய இவர் நேற்றுபிரதேச செயலாளர் வி.பபாகரனின் முன்னிலையில் தனது கடமையினை பொறுப்பேற்றுக்கொண்டார்.

கடமையினை பொறுப்பேற்பதற்காக வருகை தந்த அவரை பிரதேச செயலாளர் மாலை அணிவித்து கௌரவித்து வரவேற்றார். அத்தோடு பிரதேச செயலக நிருவாக உத்தியோகத்தர் கே.சோபிதா உள்ளிட்ட பதவிநிலை உத்தியோகத்தர்கள் மற்றும் அலுவலக உத்தியோகத்தர்களும் இணைந்து வரவேற்பினை அளித்தனர்.

அக்கரைப்பற்று ஸ்ரீ இராமகிருஷ்ண தேசிய பாடசாலையின் மாணவரான இவர் வியாபார முகாமைத்துவமானி பட்டத்தை கிழக்கு பல்கலைக்கழகத்தில் பூர்த்தி செய்தார். பின்னர் 2012ஆம் ஆண்டு நடைபெற்ற இலங்கை கணக்காளர் சேவை பரீட்சையில் சித்தியடைந்து 2013.08.01ஆம் திகதி தனது முதலாவது கணக்காளர் சேவையினை உகண பிரதேச செயலகத்தில் ஆரம்பித்தார்.

இந்நிலையில் ஆலையடிவேம்பு பிரதேச செயலகத்தில் காணப்பட்ட கணக்காளர் வெற்றிடத்திற்கு பதில் கணக்காளராக 2020.06.18ஆம் திகதி நியமிக்கப்பட்ட இவர் 2021.03.22ஆம் திகதி நிரந்தரமாக நியமிக்கப்பட்டுள்ளார்.

இறைபக்தி, விளையாட்டுத்துறை மற்றும் இசைத்துறையில் ஆர்வம் கொண்ட இவர் சிறந்த ஒக்டப்பாட் வாத்திய கலைஞர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# பட்டிருப்பு தேசிய பாடசாலையில் சித்திரப்பாட வளாகம்



(எம்.ஐ.எம்.அஸ்ஹர்)

மாணவர்கள் மத்தியில் மறைந்து கிடக்கும் (அழகியல் )சித்திரம் வரைதல் திறன்களை வளர்க்கும் நோக்கில் பட்டிருப்பு மத்திய மகா வித்தியாலயம் (தேசிய பாடசாலை ) களுவாஞ்சிக்குடியில் சித்திரப்பாட வளாகம் அமைக்கும் பணியில் சித்திரப்பாட ஆசிரியர்களும் மாணவர்களும் ஈடுபட்டு வருகின்றனர்.

பாடசாலை அதிபர் திரு. எம்.சபேஸ்குமார் அவர்களின் ஆலோசனக்கமைய மேற்கொள்ளப்பட்டு வரும் இம் முயற்சிக்கு மாணவர்கள் மத்தியில் புதிய உத்வேகமொன்று ஏற்பட்டுள்ளது.

தரைச்சித்திரம் , சுவரோவியம் , வளாகத்தை பூமரங்களால் அலங்கரித்தல், சூழலுக்கு கழிவாக அகற்றப்படும் பொருட்களை கலை உணர்வுள்ள வகையில் ஒழுங்கு படுத்துதல், நீர் வீழ்ச்சி, தரம் ஆறு முதல் க.பொ.த.உயர்தரம் வரை சித்திரம் பாடத்தில் கல்வி பயிலும் மாணவர்களின் பாடத்திட்டத்திற்கு அமைவான சித்திரங்கள் , பொருட்கூட்டம் வரைதல் , காட்சியமைப்புகள் , இலங்கையின் பிரசித்திபெற்ற ஓவியங்கள், மேலைத்தேய கீழைத்தேய ஓவியங்கள் , ஓவியச்சிற்பங்கள் , அலங்காரங்கள் , ஒட்டுச்சித்திரங்கள் போன்ற செயற்பாடுகள் தற்போது முன்னெடுத்துச் செல்லப்படுகின்றது.

இத்திட்டத்தை பாடசாலை சித்திரப்பாட ஆசிரியர்களான திரு.ஏ.கபிலேந்திரன் , திரு.எஸ். ராகுலன் , திருமதி.எஸ்.துஸ்யந்தன் , திருமதி.ரீ.தேவறூபனி , சிரேஸ்ட ஆசிரியர் எம்.ஐ.எம்.அஸ்ஹர் ஆகியோர் செயற்படுத்தி வருகின்றனர்.